RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s-222812

# கனலில் பூத்த கவிதைகள் என்ற சிறுகதைத் தொகுப்பு வெளிப்படுத்தும் பெண்களின் வாழ்வியல் சிக்கல்கள்

ம. செல்வி [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு- 638112, தமிழ்நாடு, இந்தியா.

# The problems of Women's lives revealed in a collection of short stories titled Poems that Kanalil Pootha Kavithaigal

M. Selvi [a, *]

[a] Department of Tamil, Erode Arts and Science College, Erode-638112, Tamil Nadu, India

* Corresponding Author: selvieasc12@gmail.com

Received: 27-09-2022
Revised: 23-10-2022
Accepted: 20-11-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT

Through his work, the Creator conveys the messages and ideas he has felt or intended to go to society. It is the characters who help the readers to convey their point of view to the readers. Thoughts are the main factor that determines life If the thought is strong, we have to live the life of action in its course and fear it. The purpose of this article is to explore how the female story characters that may feature in the collection of short stories, Poems That Kanalil Pootha Kavithaigal, are arranged.

**Keywords:** Kanalil Pootha Kavithaigal, Short Stories, Society, Female

## முன்னுரை

படைப்பாளர் தான் உணர்ந்த அல்லது சமூகத்திற்கு செல்ல நினைக்கும் செய்திகளையும் கருத்துக்களையும் தன்னுடைய படைப்பின் மூலம் எடுத்துரைக்கின்றார். தன்னுடைய கருத்தினை வாசகர்களுக்கு கொண்டு செல்ல உதவுவது கதைப் பாத்திரங்கள். “கனலில் பூத்த கவிதைகள்” என்ற சிறுகதை தொகுப்பில் இடம்பெறக்கூடிய பெண் கதை பாத்திரங்கள் எவ்வாறு அமைந்துள்ளது என்பதைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## குழந்தையை உயர்த்தும் தாய்

தன் நலம் இல்லாதவள் தாய். குழந்தையின் ஒவ்வொரு செயல் செயலிலும் உறுதுணையாக நிற்கக்கூடியவள்

“ஈன்று புறத்தருதல் என்தலைக் கடனே

சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே” (Swaminatha Iyer, 2014)

என்று புறநானூறு பாடல் எடுத்துரைத்தாலும் ஒரு தாயினது கடமை குழந்தைக்கு தேவையான நல்லறிவையும் ஆற்றலையும் கொடுக்கக்கூடிய கல்வியறிவை கொடுத்து இந்த சமூகத்தில் அவனையும் ஒரு நல்ல மனிதனாக உருவாக்குவதாகும். இக்கடமையை உணர்ந்த தாயாக “கனலில் பூத்த கவிதைகள்” என்று சிறுகதையில் இடம்பெறும் சரசு என்ற தாய் திகழ்கின்றாள். சரசு ஏழாம்

வகுப்பு வரை மட்டுமே படித்து இருக்கிறாள். நடேசன் நூல் வியாபாரம் செய்து வருகிறார். திடீரென ஏற்பட்ட மாரடைப்பால் இழந்து விடுகிறார். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தபோது சில நுணுக்கங்களை தனது மனைவிக்கு நடேசன் சொல்லி கொடுக்கிறார். குடும்பமே கோவில், கொண்டவனே தெய்வம் என்று வாழ்ந்து கொண்டிருந்த சரசு இவ்வளவு திறமையாக விரைவில் அனைத்தையும் கற்றுக்கொண்டு உடனடியாக களத்தில் இறங்குவாள் என்பது நினைத்து கூட பார்க்க முடியாத ஒன்று.

ஆண்கள் மட்டும் செய்யக்கூடிய ஒரு தொழிலாக காலம் காலமாக புழங்கி வரும் நூல் புரோக்கரேஜ் தொழில் நேரம் காலம் பார்க்காமல் வெளியூர் செல்ல வேண்டும் லாரி, டெம்போ என்று நூல் பையுடனே தாமும் பயணம் செய்ய வேண்டி வரும். பெரும்பாலும் சரியாக நேரத்திற்கு வீட்டிற்கு வர முடியாது. இரவு பகல் பார்க்க முடியாது… இப்படிப்பட்ட ஒரு தொழிலில் ஒரு பெண் ஈடுபடுவது எளிதல்ல. பல கஷ்டங்களுக்கு இடையே மகள் மகன் இருவரையும் நன்றாக படிக்க வைக்கிறாள்.

“மகள் படித்து முடித்த கையோடு பெரிய

கம்பெனியில் வேலையும் கிடைத்து மூன்று மாத

பயிற்சிக்காக பூனா சென்றிருக்கிறாள். மகன்

விரும்பியபடி விவசாயக் கல்லூரியில் அவனை

சேர்த்து விட்டாள்” (Pavalasankari, 2012).

## மனைவியை தண்டிக்கும் கணவன்

அன்பும் அறனும் இணைந்தது நிறைந்தது தான். இல்வாழ்க்கை இந்த இல்வாழ்க்கை ஆணும் பெண்ணும் அன்புடனும் அறத்துடனும் செயல்படுவதன் மூலம் சிறப்படைகின்றன. இதனை திருவள்ளுவர்

“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனும் அது”

என்ற குறலின் மூலம் எடுத்துரைக்கின்றார் (Puliyur Kesigan, 2016). கணவன் தன் மனைவியை தன்னை போல் ஒருத்தி என்று நினைக்காமல் தனக்கு அடிமை என்றும் அவள் ஒரு போகப் பொருள் என்று எண்ணும் போது அந்த இல்லற வாழ்வு சிறப்பு அடைவதில்லை. பூமிதி என்ற கதையில் இடம் பெறும் சகானா என்ற பெண் பேருந்தில் பயணம் செய்யும் சகபயணிக்கு ஒருவருக்கு உதவுகிறாள் ஆகையால் காவல் நிலையம் வரை சென்று வருகிறாள். பின்பு அந்தப் பிரச்சினையால் அவள் இல்லற வாழ்க்கை முடிவுக்கு கொண்டு வருகிறது. கார்த்திக் சஹானா இருவரும் புதுமண தம்பதியார்கள் கார்த்திக் நன்கு படித்து நாகரீகமாக உடுத்தி நாகரீகமாக சாப்பிட்டு தன்னை மிகவும் சமூக நலனில் அக்கறை கொண்ட மாடர்ன் சிந்தனையாளனாக காட்டிக் கொள்ளும் கார்த்திக் இனிமேல் சமூக சேவகி போல் பொதுநல பிரச்சனைக்கு நீ போகக்கூடாது அப்படி சென்றால் நாம் பிரிந்து விட நேரிடும் என்பதை தெளிவாக கூறுகிறான். அதற்கு அவள் பதில் எதுவும் கூறாமல் தனது அம்மா வீட்டிற்கு சென்று விடுகிறாள்.

“சரி தெளிவாகவே சொல்கிறேன்… இனிமேல்

பெண் பிள்ளையா இலட்சணமா வேலைக்குப் போனோமா

வந்தோமான்னு வரவேண்டும். போற இடத்தில் பெரிய

ஹீரோயின் மாதிரி வேலையெல்லாம் காட்டாமல்

இருக்கணும். உனக்கு ஒரு பிரச்சனையின்னா என்னால

உன் பின்னால் எண்ணம் அலைஞ்சிடிருக்க முடியாது” (Pavalasankari, 2012)

பெண் என்பவள் ஆணிற்கு அடங்கி அவன் சொல்வதை கேட்டு நடந்து கொள்ள வேண்டும் இல்லை எனில் அவளது வாழ்க்கை பாதிக்கக்கூடும் என்பதை சஹானா கதாபாத்திரம் உணர்த்துகிறது.

## சிறந்த மாமியார் மருமகள்

அம்மா என்ற சிறுகதையில். வனிதா குடும்ப பொறுப்புள்ள மருமகள். வனிதாவின் கணவர் மகேந்திரன் தாயார் வனிதாவின் மாமியார் நோய்வாய்ப்பட்டுள்ளார். மகேந்திரன் அப்பாவுக்கு ஓபன் ஹார்ட் சர்ஜரி அறுவை சிகிச்சைக்கு ஐந்து இலட்சம் கடன் வாங்குகிறார். குழந்தைகளின் இருவரின் படிப்பு செலவு, மருத்துவ செலவு என செலவுகள் கூடிக்கொண்டே போகிறது. ஆனாலும் வனிதா தனது மாமியரை தனது தாய்போல் நன்றாக கவனித்து கொள்கிறாள். ஆனால் மாமியார் மகன், மருமகள் இருவரை வெறுப்பது போல் நடிக்கிறாள் தான் இறந்த பிறகு தனது இறப்பு அவர்களை பாதிக்க கூடாது என்பதற்காக இன்றைய சமுதாயத்தில் இன்றைய காலகட்டத்தில் இப்படிப்பட்ட மருமகளையும் மாமியாரையும் ஒரு சில இடங்களில் தான் காண முடியும்.

“மகனும், மருமகளும் தனக்காகp படும் வேதனையும் தாங்க முடியவில்லை. அவர்களுடைய

அன்புப்பிடி மேலும் குற்ற உணர்ச்சியை ஏற்படுத்துகிறது

அதனால் அவர்கள் இருவரும் தன்னை வெறுத்து விட்டால்

எனக்காக அதிகம் கவலைப்படத் தேவையும் இருக்காது” (Pavalasankari, 2012).

## ஏழைகளின் வறுமை நிலை

அதிகாலை தொடங்கி இரவு வரை ஓய்வின்றி உழைத்தாலும் அம்மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சி நிகழ்வதில்லை குயிலி என்ற பெண் கட்டிட தொழில் சிட்டள் வேலை செய்கிறாள். அவள் வேலை செய்யும் இடத்தில் மூன்று நாட்களாக 35 வயது மதிக்கதக்க ஆண் ஒருவர் படுத்து கிடக்கிறார். அவருக்கு உதவி புரிகிறாள். உணவு கொடுக்கிறாள். அவன் யார் என்பது அவனுக்கே தெரியவில்லை. சுயநினைவு இல்லாமல் இருக்கிறான். இறந்து போன தனது காசி அண்ணன் நினைவாக அவனை காசி அண்ணன் என அழைக்கிறாள். தன்னோடு வீட்டிற்கும் அழைத்துச் செல்கிறாள். ஏழ்மை நிலையிலும் தன்னோடு தங்க வைத்துக் கொள்கிறாள் வயிற்று பாட்டிற்கு அவள் வேலை செய்யும் இடத்திற்கே அவனையும் அழைத்து செல்கிறார்.

கட்டிட வேலை செய்யும் போது குயிலி மீது சுவர் இடிந்து விழும்போது காசி அதனை தடுத்து குயிலி அவ்விடத்தில் கைப்பிடித்து இழுத்து தள்ளி தானும் தப்பிக்க முயற்சிக்கும் போது சுவர் காசியின் மீது விழுந்து விடுகிறது. பிறகு அவனுக்கு சுய நினைவு திரும்புகிறது. காசி என்ற பெயர் கொண்ட மனோகர் பெரிய கான்ட்ராக்டர் மற்றும் தொழிலதிபர் என்பது தெரிய வருகிறது தனக்கு உதவி புரிந்த குயிலி தன்னுடன் அழைத்து செல்ல மனோகர் முன் வருகிறார். குயிலே அதனை மறுத்துவிடுகிறாள்

## ஏழ்மையிலும் நேர்மை

வாழ்க்கை இன்றைய மனிதனுக்கு புதுமையான புதிராகவே உள்ளது கனவு காண்பதை தனது கொண்டவன் நனவாவதற்கான முயற்சியை தேடுவதில்லை சோம்பலும் முயற்சியின்மையுமே ஒருவனின் வாழ்க்கை தொலைவதற்கான காரணிகள் என்பதை அவன் அறிகின்ற வரை அவனுக்கு வாழ்க்கை புதிராகவே உள்ளது.

“மாறியது நெஞ்சம்” என்ற சிறுகதையில் கார்பென்டர் முத்து மல்லிகா இவர்களுக்கு இரண்டு பிள்ளைகள் முத்து கார்பென்டர் வேலை செய்கிறான் மல்லிகா ஜவுளி கடையில் வேலை செய்து குடும்பத்தை காப்பாற்றுகிறார் முத்து குடிப்பழக்கம் மது சூது என்ற எந்த தீய பழக்கம் எதுவும் இல்லை ஆனால் லாட்டரி சீட்டில் அனைத்து பணத்தையும் விட்டு விடுவான் கந்துவட்டியில் கடன் வாங்கி

அதனையும் கட்ட முடியாமல் போக கந்துவட்டிக்காரர் வசைபாட கோபமடைந்த மல்லிகா கணவனிடம் சண்டை இடுகிறாள்.

மனமுடைந்த முத்து கட்டிடத்தில் வேலை பார்க்கும் பொழுது அவனை குதித்து தற்கொலை செய்து கொள்கிறான் உடன் வேலை பார்க்கும் கட்டிட சமூகத்தினர் தேர்ச்சியளாக நடந்த விபத்து இழப்பீடாக 5 லட்சம் தரும்படி கேட்கிறார்கள்

"முதலாளியின் அருகில் சென்ற மல்லிகா ஐயா என்

புருஷன் மேல தான் தப்பு ஐயா அவர் மனசு அறிந்து தான்

தானே வெல்க்கை கழட்டிவிட்டு கீழே விழுந்து

உயிரை விட்டிருக்கிறார் அதனால் நீங்கள் விருப்பப்பட்டதை

கொடுங்க சார்" (Pavalasankari, 2012)

பின் வந்த முதலாளி மனம் மாறி ஐந்து லட்சம் பணமும் குழந்தைகளின் படிப்பு செலவும் தங்களை ஏற்றுக் கொள்கின்றார் மல்லிகா ஏழ்மையிலும் நேர்மையாக வாழ்கிறாள்.

## இறந்த பிறகும் குடும்பத்தை காக்கும் பெண் தெய்வம்

ஒயிலரசி இயற்கையின் மீது அளவில்லாத பிரியம் கொண்டவளாக இருக்கிறாள் 18 வயது பருவமங்கை கல்லூரியில் பட்டம் பயின்று வருகிறாள் அவர்களது குலதெய்வம் கன்னிமார் சாமி கதை பற்றி பாடிய இடம் கேட்டு தெரிந்து கொள்கிறாள் மூளையில் ஏற்பட்ட கட்டியின் காரணமாக திடீரென இறந்து விடுகிறார் ஒயிலின் இழப்பை ஈடுகட்ட முடியாமல் அவளது குடும்பத்தினர் தவித்து வருகின்றனர் இறந்த பிறகும் அவர்களது தோட்டத்தில் தெய்வமாக மாறி குடும்பத்தை காக்கும் பெண் தெய்வமாக பொன்வண்டு சிறுகதையில் ஒயிலரசி பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது

## முடிவுரை

எண்ணங்களே வாழ்வைத் தீர்மானிக்கும் முக்கியக் காரணி எண்ணம் வலுவானால் செயல் சிறக்கும் வாழ்வை அதன் ஓட்டத்தில் சென்று அதை நாம் பயப்படுத்தி வாழ வேண்டும். நம்பிக்கை என்ற விதை விதைத்தால் வெற்றியான வாழ்க்கை விருட்சத்தை அடைய முடியும். பெண்கள் அடிமைத்தனத்தை விட்டு வெளிவந்து வாழ்வில் உயர்வடைய வேண்டும் என்ற சிந்தனையை எடுத்துக்காட்டும் விதமாக குழந்தையை உயர்த்தும் தாய் மனைவியை தண்டிக்கும் கணவன் சிறந்த மருமகள் ஏழைகளின் வறுமை நிலை ஏழ்மையிலும் நேர்மை இறந்த பிறகும் குடும்பத்தை காக்கும் பெண் தெய்வம் என்று பல்வேறு விதமாக பெண்பாத்திரங்கள் அமைகின்றன. என்பதை ஆராயும் விதமாக இவ்வாய்வானது அமைகிறது.

## References

Pavalasankari, (2012) Kanalil Pootha Kavithaigal, Palaniyappa Brothers, Chennai, India

Puliyur Kesigan, (2016) Thirukural, Poompuhar Pathippagam, Chennai, India

Swaminatha Iyer, U.V., (2014) Purananooru Moolamum Uraiyum, U.Ve.Sa, Noolaga nilayam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License